


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஆகஸ்டு 16, 2018 | புரட்சி 17 | முழக்கம் 31 | விலை: ரூ.3.00




**• கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்று! • தமிழ்நாட்டில் ‘நீட்’டை விலக்கு! • மத்திய அரசுப் பணிகளில் வடநாட்டுக் காரர்களைத் திணிக்காதே! • தமிழகத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் வேலை கொடு; தேர்வுகளை தமிழில் நடத்து! • தனியார் துறைகளில் இடஒதுக்கீடு வழங்கு!**

# திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் ‘கல்வி உரிமை பரப்புரைப் பயணம்’

**தோழர்களே!**

கல்வி - வேலை வாய்ப்பு - இதுவே தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களாகிய நமக்கு இரண்டு கண்கள்:

*ஆனால், நமது கண்கள் இப்போது பிடுங்கப் படுகின்றன. மீண்டும் நமது தாத்தா, பாட்டி களின் ‘கைநாட்டு’க் காலத்துக்கே விரட்டப் பட்டுவிடுவோமோ என்ற அச்சம் சூழ்ந்து நிற்கிறோம்.*

*இதோ சில தகவல்கள்... இதைப் படியுங்கள்.*

1976ஆம் ஆண்டு வரை கல்வி நமது மாநில அரசுக்கு மட்டுமே உரிமையாக இருந்த நிலை மாறி மத்திய அரசு ‘நாங்களும் தலையிடுவோம்’ என்று குறுக்கிட்டுத் தானாகவே பொதுப் பட்டியலுக்கு மாற்றிக் கொண்டது.

**அதன் விளைவு? இப்போது நமக்கு அடி மேல் அடி.**

‘நீட்’ தேர்வு அப்படித்தான் நுழைந்தது. ‘பிளஸ் டூ’ தேர்வில் நமது மாணவச் செல்வங்கள் இரவு பகலாகப் படித்துப் பெற்ற மதிப்பெண் களை குப்பைக் கூடையில் வீசி விட்டார்கள்.

“வேண்டாம்; எங்கள் மாநிலத்தை விட்டு விடுங்கள்” என்று சட்டமன்றத்திலேயே தீர்மானம் போட்டோம். நடுவண் ஆட்சி மதித்ததா? இல்லை. 1200க்கு 1176 மதிப்பெண் வாங்கிய அருமைச் சகோதரி அனிதா போன்றோரைப் பறி கொடுத்ததுதான் மிச்சம்.

இலட்சம் இலட்சமாய் பணத்தை தனியார் பயிற்சி மய்யங்களுக்குக் கொட்டி அழுது, நீட் தேர்வுக்குப் பயிற்சி பெற, நமது கிராமத்து ஏழை எளிய மாணவ மாணவிகள் எங்கே போவார்கள்? அப்படியும் மீறி எழுதப் போனால் தேர்வு மய்யத்தில் ‘சோதனை’ என்ற அலைக்கழிப்பு; தாய்மொழியாம் தமிழில் தேர்வு எழுதியவர் களுக்கோ தண்டனை; கேள்வித் தாள்களில் குளறுபடி; சி.பி.எஸ்.ஈ.யோ நீதிமன்றத்தில் திமிர்வாதம் பேசுகிறது. பிறப்பால் தாழ்ந்தவன் யார் என்று சி.பி.எஸ்.ஈ. வினாத்தாளில் விடை கேட்கிறது.

- மத்திய அரசாங்கத்தின் பணிகளுக்கு தேர்வு எழுத வேண்டும் என்றால் இந்தியிலும், ஆங்கிலத்திலும்தான்! மாநில மொழிகளில் தமிழில் எழுத முடியாதாம். அனைத்து மத்திய அரசு அலுவலகங்களிலும் இந்திக்காரர்களே - வடமாநிலங்களிலிருந்து அதிகாரிகளாக அரசு ஊழியர்களாக குவிந்து கிடக்கிறார்கள். *(வேறு மாநிலங்களிலிருந்து தொழிலாளர் களாக வேலை தேடிவரும் தோழர்களைக் குறிப்பிடவில்லை; அதிகாரிகளைத்தான் கூறுகிறோம்)* இந்தப் புள்ளி விவரத்தைப் பாருங்கள்:

*2013லிருந்து 2016 வரை தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பணிகளில் வேலைக்கு வந்த இந்திக்காரர்கள் 1988 பேர். நமது தமிழ் பேசும் மக்கள் 110 பேர் மட்டுமே.*

*அந்தந்த மாநில மொழிகளிலே தேர்வுகளை எழுத அனுமதி மறுக்கிறார்களே?* – **இது நியாயமா?**

அரசு உதவிகள் பலவற்றையும் பெற்று தொழில் தொடங்குகின்றன தனியார் தொழில் நிறுவனங்கள். அமெரிக்கா, அய்ரோப்பிய நாடுகளில் கருப்பர்களுக்கு வழங்குவதுபோல் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட் டோருக்கு இடஒதுக்கீட்டை நடுவண் அரசு உறுதி செய்ய மறுக்கிறது? – **இது நியாயமா?**

இந்தியாவிலேயே அதிக மருத்துவக் கல்லூரி களை நமது மாநிலத்தில் தான் உருவாக்கியுள் ளோம். 24 அரசு மருத்துவக் கல்லூரிகள்; மொத்தம் 5660 இடங்கள். இதில் சரி பகுதி இடங்களை நடுவண் ஆட்சி பறித்துக் கொள்கிறது.

மருத்துவத் துறையில் தலை சிறந்த ‘நிபுணர்களை’ உருவாக்கும் ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ எனும் உயர்நிலை மருத்துவப் படிப்புகளில் இடஒதுக்கீட்டை முற்றிலுமாக நீக்கிவிட்டது நடுவண் ஆட்சி. எம்.டி., எம்.எஸ். போன்ற மேல் பட்டப் படிப்புக்கோ, பிற்படுத்தப் பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீட்டையும் முடக்கி விட்டார்கள். இதன் காரணமாக 2160 பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களின் முதுநிலை மருத்துவப் பட்டப் படிப்பு வாய்ப்புகளை இழந்து விட்டோம். அடுத்து பட்டப்படிப்பான ‘எம்.பி.பி.எஸ்.’க்கும் இறுதி யாண்டு தேர்வுகள் இனி அகில இந்திய தேர்வாகப் போகிறது. – **இது நியாயமா?**

62 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த பல்கலைக்கழக மானியக் குழு கலைக்கப்பட்டு, இந்திய உயர் கல்வி ஆணையம் என்ற அமைப்பைக் கொண்டு வந்திருக்கிறது, நடுவண் ஆட்சி. இனி, மாநில அரசுகள் புதிய பல்கலைக் கழகங்களைத் தொடங்க முடியாது. கல்வியை பன்னாட்டு சந்தையில் விற்பனைப் பொருளாக மாற்றப்பட வேண்டும் என்ற உலக வர்த்தக அமைப்பின் தொடர்ச்சியான வற்புறுத்தலுக் காகவே வந்திருக்கிறது இந்த மாற்றம். இனி உயர் கல்விக் கொள்கைகளை தீர்மானிக்கப் போவது கல்வியாளர்கள் அல்ல; பார்ப்பன உயர் ஜாதி அதிகார வர்க்கம் தான். சமூக நீதிக்கு அவர்கள் சங்கு ஊதப் போகிறார்கள்.

***தமிழக அரசு நிலை என்ன?***

சரி; தமிழக அரசின் நிலை என்ன? மத்திய அரசுக்கு ஆமாம் சாமி போட்டு, ‘அப்படியே ஆகட்டும்’ என்று மண்டியிட்டுக் கிடக்கிறது.

தமிழக அரசு நடத்தும் தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்புக்கான தேர்வுகளை (பொதுப் போட்டிக்கு) தமிழ் மொழி தெரியாத, பிற மாநிலத்தவர்களும், நேபாளம் பூட்டான் நாட்டைச் சார்ந்தவர்களும் எழுதுவதற்குக் கதவைத் திறந்து விட்டார்கள்.

நமது வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைக்குக் காத்திருப்போர் (2017ஆம் ஆண்டு நிலவரப்படி) 82 இலட்சம் பேர். இதில் பொறியாளர்கள் 2.4 இலட்சம் பேர்; டாக்டர்கள் 4307 பேர்.

தமிழ்நாடு அரசுப் பள்ளிகள் நிலை என்ன? ஏராளமான பள்ளிகள் மூடப்படுகின்றன. 13,000 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆசிரியர் பயிற்சியை முடித்தவர்களை ‘தகுதித் தேர்வு’ எழுதச் சொன்னார்கள். இப்போது பணியிடங் களுக்கு தேர்வு செய்ய போட்டித் தேர்வு என்ற இரண்டாவது தேர்வைத் திணித்திருக்கிறார்கள். வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டிய ஆட்சி வேலைகளுக்கு வரவிடாமல் வடிகட்டும் போட்டித் தேர்வுகளை நடத்திக் கொண்டு, ‘தகுதி திறமை’ பேசிக் கொண் டிருக்கிறது. **இது சமூக நீதியா?**

அரசுப் பள்ளிகளில் எல்.கே.ஜி., யு.கே.ஜி. மழலையர் வகுப்புகள் தரமாக தமிழ் வழியில் தொடங்காததால், பெற்றோர்கள் தனியார் பள்ளிகளை நோக்கித் தள்ளப்படுகிறார்கள். அவர்கள் கேட்கும் கல்விக் கட்டணம் செலுத் தவே நமது மக்களுக்கு மூச்சுத் திணறுகிறது.

**கல்வி பொதுப் பட்டியலில் இருப்பதால் மத்திய அரசு உருவாக்கும் சமூகநீதிக்கு எதிரான கல்விக் கொள்கைகளே எல்லாவற்றுக் கும் அடிப்படையான காரணம்.**

பெரியார் – நமது மக்களின் கல்வி, வேலை வாய்ப்பு உரிமைக்கும் சுயமரியாதைக்கும் 95 வயது வரை சாகும் வரை போராடினார்.

காமராசர், அண்ணா, கலைஞர், எம்,.ஜி.ஆர். என்று நமது முதல்வர்கள் இந்த உரிமைகளை அரண்போல் காத்து நின்றார்கள்; வளர்த் தெடுத்தார்கள்.

இன்று.... ஒவ்வொன்றாய் பறி கொடுத்து நிற்கிறோம். என்ன செய்யப் போகிறோம்? எப்படித் தடுக்கப் போகிறோம்?

ஒடுக்கப்பட்ட சமூகத்து இளைஞர்களே நீங்கள் போராடக்கூட வேண்டாம்; இந்த ஆபத்து களை ஒவ்வொருவரிடமும் எடுத்துக் கூறுங்கள்!

போராடும் இயக்கங்களுக்கு ஆதரவு தாருங்கள். அதுவே போதும்.

‘யாருக்கோ வந்தது; நமக்கென்ன?’ என்று ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்ப்பது மிகப் பெரும் சமூக துரோகம் அல்லவா?

நாம் மக்கள் கருத்தை உருவாக்குவோம்; அதுவே வெற்றியைத் தீர்மானிக்கும்; அரசுகளை பணிய வைக்கும்!

***தோழர்களே உறுதி ஏற்போம்***

***கல்வி, வேலை வாய்ப்பு – நமது உரிமை!***

***சுயமரியாதை – நமது அடையாளம்!***

***இதை எடுத்துச் சொல்லவே இந்தப் பயணம்!***

***ஆதரவு தாரீர், தமிழர்களே!***

தோழமையுள்ள

**திராவிடர் விடுதலைக் கழகம்**

# 27 ஆண்டுகளாகச் சிறையில் வாடும் ஏழு தமிழர்களின் விடுதலை எப்போது?

பார்ப்பன-மேல்சாதி இந்திய ஆளும் வர்க்கம் வன்னெஞ்சத்துடன், இராசிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட ஏழு தமிழர்களின் உயிருடன் கண்ணா மூச்சி விளையாடிக் கொண்டிருக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த எழுவரின் விடுதலை, கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமல் போனதுபோல் இழுத்தடிக் கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இராசிவ் காந்தி 1991 மே 21 அன்று திருப்பெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றபோது கொல்லப்பட்டார். இந்தக் கொலை வழக்கை விசாரித்த பூந்தமல்லி தடா நீதிமன்றம் 26 பேருக்கு மரண தண்டனை விதித்தது. இயற்கை நீதிக்கு முற்றிலும் எதிரான இத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்சநீதிமன்றம் முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வரின் மரணதண்டனையை உறுதி செய்தது. இராபர்ட் பயாஸ், செயக்குமார், இரவிச்சந்திரன் ஆகிய மூவரின் மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தது. மற்ற 19 பேரை விடுதலை செய்தது.

பின்னர் 2000ஆம் ஆண்டில் நளினியின் மரண தண்டனையை அப்போதைய தமிழக அரசு மனிதநேய அடிப்படையில் வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தது. முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் குடியரசுத் தலைவருக்குக் கருணை விண்ணப்பம் அனுப்பினர். 11 ஆண்டுகள் கிடப்பில் போட்டிருந்த பின், இவை நிராகரிக்கப்பட்டன. இந்த முடிவை எதிர்த்து முருகன், சாந்தன், பேரறிவாளன் மூவரும் உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்தனர். இம்மூவரின் மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைக்க வலியுறுத்தி செயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு 30.8.2011 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. இக் கோரிக்கையை வலியுறுத்தித் தமிழகம் முழுவதும் பேரணிகளும், கூட்டங்களும் நடத்தப்பட்டன.

தமிழரான சதாசிவம் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தபோது, 18.2.2014 அன்று, அவருடைய தலைமையிலான அமர்வு முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தது. அத்தீர்ப்பின் இறுதியில், குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 432இன்படி, "உரிய அரசு (Appropriate Government) கைதிகளை விடுதலை செய்வது பற்றி முடிவு செய்ய லாம்" என்று கூறி நல்லதோர் வழியையும் காட்டியிருந்தது.

இத்தீர்ப்பு வெளியான அடுத்த நாள், 19.2.2014 அன்று சட்டமன்றத்தில், முதலமைச்சராக இருந்த செயலலிதா, முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, இரவிச்சந்திரன், இராபர்ட் பயாஸ், செயகுமார் ஆகிய ஏழு பேரையும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 432இன்படி விடுதலை செய்யத் தமிழக அரசு முடிவெய்திருப்பதாகவும், இதற்கு மூன்று நாள்களுக்குள் நடுவண் அரசு தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்றும் அறிவித்தார்.

மன்மோகன் சிங் தலைமையிலிருந்த காங்கிரசு அரசு அடுத்த நாளே (20.2.2014) உச்சநீதி மன்றத்தில், "இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 432இன்படி, நடுவண் அரசின் ஒப்புதலைப் பெறாமல் அந்த ஏழு பேரை விடுதலை செய்யும் அதிகாரம் தமிழ்நாட்டு அரசுக்கு இல்லை; ஏனெனில் இராசிவ் காந்தி கொலை வழக்கு மத்தியப் புலனாய்வுத் துறையால் விசாரிக்கப்பட்டு, நடுவண் அரசின் 'தடா' சட்டத்தின்கீழ் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்; எனவே எழுவர் விடுதலை குறித்துத் தமிழ்நாட்டு அரசின் அறிவிப்புக்குத் தடை விதிக்க வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தது. இதே காரணத்தைக் காட்டி உச்சநீதிமன்றம், தமிழ்நாட்டு அரசு ஏழு பேரை விடுதலை செய்வதற்கு இடைக் காலத் தடை விதித்தது.

இந்த வழக்கில் 2015 திசம்பர் 2 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் மத்தியப் புலனாய்வுத் துறை யாலோ அல்லது நடுவண் அரசின் வேறொரு அமைப் பாலோ விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்களை நடுவண் அரசின் ஒப்புதல் இல்லாமல் விடுதலை செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று கூறப்பட்டது. இதை மறுஆய்வு செய்யுமாறு தமிழக அரசு விண்ணப்பித்தது. அய்ந்து நீதிபதிகளைக் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு தமிழக அரசின் மறுஆய்வு குறித்த வழக்கை விசாரித்தது. 7.2.2017 அன்று இதன் மீதான தீர்ப்பு வழங்கப்பட்டது. 2015 திசம்பர் 2 அன்று நீதிபதி கலிபுல்லா தலைமையிலான அமர்வு வழங்கிய தீர்ப்பை இது உறுதி செய்தது. அரசமைப்புச் சட்ட அமர்வு அளித்த இத்தீர்ப்பை மறுஆய்வு செய்யுமாறு தமிழக அரசு முறையீடு செய்துள்ளது.

இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் 23.1.2018 அன்று ஏழு பேரை விடுதலை செய்வது குறித்து நடுவண் அரசு மூன்று மாதங்களுக்குள் அதன் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. 14.2.2018 அன்று நடுவண் அரசின் உள்துறை அமைச்சகம் ஏழு பேரின் உடல்நிலை, மனநலம், அவர்களின் பொருளாதார, சமூகப் பின்னணி உள்ளிட்ட எட்டு விவரங்கள் குறித்து அறிக்கை அனுப்புமாறு தமிழக அரசுக்கு மடல் அனுப்பியது. நடுவண் அரசு கேட்ட அறிக்கையைத் தமிழக அரசு அண்மையில் அனுப்பியது. 12.6.2018 நாளிட்ட தினத்தந்தி நாளேட்டின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில், "ராசிவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் நளினி உள்பட 7 பேர் விடுதலையாக வாய்ப்பு?" என்று தலைப்புச் செய்தி வெளியிடப்பட்டது. இது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத் தியது.

ஆனால் 15.6.2018 நாளிட்ட 'தி இந்து' ஆங்கில நாளேட்டின் சென்னைப் பதிப்பில், ஏழு பேரை விடுதலை செய்ய வேண்டும் என்கிற தமிழ்நாட்டு அரசின் கோரிக்கையைக் குடியரசுத் தலைவர் நிராகரித்தார் என்று முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வெளியிடப் பட்டது. இது பெரும் ஏமாற்றமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது.

2014இல் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனையை உச்சநீதிமன்றம் வாழ்நாள் தண்டனையாகக் குறைத்த பிறகு, ஏழு பேரும் இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருப்பதால் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அரசிடம் விண்ணப்பம் அளித்தனர். இதன் அடிப்படையில் தமிழக அரசும் ஏழு பேரையும் விடுதலை செய்வதற்கு நடுவண் அரசு ஒப்புதல் வழங்க வேண்டும் என்று கோரி கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு தடவைகள் மடல் எழுதியது. தமிழக அரசின் இக்கோரிக்கையுடன் நடுவண் அரசு தன் கருத்தையும் இணைத்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது.

"தமிழக அரசின் முடிவை நடுவண் அரசு ஏற்கவில்லை. நடுவண் அரசின் அமைச்சரவையின் முடிவின் அடிப்படையில்தான் முடிவு எடுக்கப்பட வேண்டும் என்ற முறையில், தமிழக அரசின் கோரிக்கை நிராகரிக்கப்படு கிறது" என்று குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார், நடுவண் அரசின் உயர் அதிகாரி, ஆங்கில 'தி இந்து' செய்தியாளரிடம் "முன்னாள் பிரதமர் இராசிவ் காந்தியைக் கொலை செய்தவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் விடுதலை செய்யப்படமாட்டார்கள்" என்று கூறியதாக 15.6.2018 'தி இந்து' நாளேட்டில் பதிவு செய்யப்பட் டுள்ளது. ஆட்சியாளர்களைவிட, இந்திய அரசின் உயர் பதவிகளில் இருக்கும் பார்ப்பன-மேல்சாதி அதிகார வர்க்கம்தான் வன்னெஞ்சத்துடன் ஏழு தமிழர்களின் விடுதலைக்குப் பெருந்தடையாக இருக்கிறது.

இராசிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட ஏழு பேரும் இக்கொலைச் செயலிலோ, இதற்கான சதித் திட்டத்திலோ நேரடியாகத் தொடர்புடையவர்கள் என்பதற்கான சான்று எதுவும் எண்ணப்பிக்கப்பட வில்லை. பேரறிவாளன் வாங்கிக் கொடுத்த பேட்டரி தான் மனித வெடிகுண்டாக வந்த தாணுவின் பெல்டில் பயன்படுத்தப்பட்டதா என்பது உறுதிசெய்யப்படவில்லை. மேலும் அந்த வெடிகுண்டு பெல்ட் எங்கு தயாரிக்கப் பட்டது என்பதுகூட புலனாய்வில் கண்டறியப்பட வில்லை. இராசிவ் காந்தி கொலையில் அயல்நாட்டுச் சதித்திட்டம் குறித்த விசாரணை, தொடர முடியாமல் முட்டுச்சந்தில் நிற்கிறது.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் உயர் அதிகாரி தியாகராசன், பேரறிவாளனின் ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்ததில் முக்கியமான பகுதியைத் தவிர்த்து விட்டதாக ஒப்புக்கொண்டார். தன் பிழை குறித்து உச்சநீதிமன்ற அமர்வு முன், பிரமாண வாக்குமூலம் அளித்துள்ளார். இவ்வழக்கில் தண்ட னையை உறுதி செய்த உச்சநீதிமன்ற அமர்வுக்குத் தலைமை தாங்கிய நீதிபதி கே.டி. தாமஸ், தங்களது தீர்ப்பில் சட்ட அறியாமை என்ற பிழை நிகழ்ந்துள்ளதை ஏற்றுக் கொண்டு, ஏழு தமிழர்களையும் விடுதலை செய்துவிடலாம் என்று வெளிப்படையாகப் பலமுறை கருத்துத் தெரிவித்து இருக்கிறார். கொலையுண்ட இராசிவ் காந்தியின் மகன் இராகுல்காந்தி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், ஏழு பேரை விடுதலை செய்வதில் தங்களுக்கு மறுப்பேதுமில்லை என்று தெரிவித்துவிட்டனர்.

குற்றவாளிகளைத் தண்டிப்பது என்பது வாழ்நாள் முழுவதும் அவர்களைச் சிறையில் வைத்துக் கொடுமைப் படுத்துவது அன்று. தம் குற்றத்தை - தவறை உணர்ந்து மனந்திருந்தி வாழ்வதற்கான வாய்ப்பை வழங்குவதே தண்டிக்கப்படுவதன் நோக்கமாகும். சனநாயக நெறி முறைகள் போற்றப்படும் நாடுகளில் இந்த நடைமுறையே பின்பற்றப்படுகிறது. அதனால் தான் 130க்கு மேற்பட்ட நாடுகளில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டிருக்கிறது.

27 ஆண்டுகளாகச் சிறையில் இருந்து வரும் ஏழு பேரும் சிறை விதிகளை மீறாமல், நன்னடத்தையுடன் இருந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் கல்வித் தகுதியை மேலும் உயர்த்திக் கொண்டதுடன் மற்றவர்களுக்கும் கல்வி

(4ஆம் பக்கம்)

## பெரம்பலூர் – கருஞ்சட்டைக் கடலாகட்டும்!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயலாற்றல் மிக்க தோழர்கள் தமிழர்களின் குறிப்பாக தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் பாதிக்கப் படும் கல்வி வேலை வாய்ப்பு உரிமைகளை மக்களிடம் எடுத்துச் சொல்ல பரப்புரைப் பயணத்தைத் தொடங்குகிறார்கள்.

2018 ஆக. 20இல் தொடங்கி 26இல் பெரம்பலூரில் நிறைவு விழா மாநாடு; 6 முனைகளிலிருந்து புறப்பட்டு 180 ஊர்களில் பரப்புரைக் கூட்டங்கள்.

எத்தனையோ தடைகளைத் தகர்த்து 'மனு சாஸ்திரம்' நமக்கு மறுத்த கல்வி உரிமையை மீட்டு நமது தலைவர்கள் போராடிப் பெற்றுத் தந்த உரிமைகள் இப்போது பறிபோய்க் கொண்டிருக்கின்றன.

நீதிக்கட்சி ஆட்சியில் தொடங்கியது நமக்கான வகுப்புவாரி உரிமை.

1950இல் தமிழ்நாட்டில் பின்பற்றி வந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் செல்லாது என்று சென்னை உயர்நீதி மன்றமும் பிறகு உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்தது. பெரியார் போராடினார்; தமிழகம் கொந்தளித்தது. இந்திய அரசியல் சட்டம் பெரியார் நடத்திய போராட்டத்தால் முதன் முதலாக 1951இல் திருத்தப்பட்டது.

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக் கான போராட்டத்தையும் வடவர் சுரண்டல் எதிர்ப்புப் போராட்டத்தையும் 1950இல் பெரியார் இணைத்தே நடத்தினார் என்பதை நாம் சுட்டிக் காட்டியாக வேண்டும்.

ஆம்; நமது கைத்தறித் தொழி லாளர்களுக்காக சென்னை பாரி முனையிலிருந்த வடநாட்டு செல்லாராம்ஸ் துணிக் கடை முன் 72 நாள்கள் தொடர் மறியல் நடத்தி பெரியார் தொண்டர்கள் கைது ஆனார்கள்.

இப்போதும் அதே நிலைதான். சமூகநீதிப் போராட்டத்தையும் வடவர் எதிர்ப்புப் போராட்டத்தையும் இணைந்து நடத்தும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம்.

ஓமந்தூரார் – காமராசர் – அண்ணா – கலைஞர் – எம்.ஜி.ஆர் ஆட்சிகளில் இடஒதுக்கீட்டு வேலை வாய்ப்புகளில் நாம் பெற்ற உரிமைகளை இழந்து நிற்பதையும் தமிழகத்தில் மத்திய அரசுப் பணிகளில் வடநாட்டுக்காரர்கள் குவிக்கப்படும் ஆபத்துகளை மக்களிடம் எடுத்துச் சொல்வதற்குமே இப்பயணம்.

- 'நீட்' மிரட்டுகிறது.
- மருத்துவக் கல்லூரியில் பிற்படுத்தப் பட்டோர் இடஒதுக்கீடு பறி போகிறது.
- பல்கலைக்கழக மான்யக் குழு கலைக்கப்பட்டு பல்கலைக் கழகங்கள் தொடங்கும் உரிமை மாநிலங்களிடமிருந்து பறிக்கப்படு கிறது.

தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பணிகளில் வடநாட்டு இந்திக்காரர்கள் குவிந்து வருவதைத் தடுத்து நிறுத்தா விட்டால் தமிழகமே வடநாடாகிவிடும்! எனவே தான் சமூக நீதியையும் வடவர் எதிர்ப்பையும் ஒரே நேரத்தில் பெரியார் எதிர்த்த அதே கடமையை இன்று நாம் நிறைவேற்றப் புறப்பட்டிருக்கிறோம்.

2018 ஆக.26 இல் பெரம்பலூரில் அனைத்து பரப்புரைக் குழுக்களும் சங்கமிக்கின்றன. கருஞ்சட்டைக் கடலைப் பார்க்கப் போகிறோம்.

பயணத்தில் பங்கேற்க வாய்ப்பில்லாத தோழர்களே! தமிழின உணர்வாளர்களே! பெரம்பலூர் நோக்கி அன்புடன் அழைக்கிறோம்!

# பெரியார் சிலைக்கு மாலை போடுவது குற்றமாம்!

குண்டர் சட்டத்தைத் தகர்த்து விடுதலை யானவுடன், மே 17 இயக்க ஒருங்கிணைப் பாளர் திருமுருகன் காந்தி, 2017ஆம் ஆண்டு தோழர்களுடன் நேராக இராயப்பேட்டை திராவிடர் விடுதலைக் கழகத்தின் பெரியார் படிப்பக வாயிலில் உள்ள பெரியார் சிலைக்கு மாலையிட வந்தார். அப்போது திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் வரவேற்று மாலை அணிவிப்பு நிகழ்வில் பங்கேற்றனர். ஓராண்டுக்குப் பிறகு இப்போது சட்ட விரோதமாகக் கூடி பெரியார் சிலைக்கு மாலை அணிவித்ததாக காவல்துறை தோழர் திருமுருகன் காந்தியை கைது செய்துள்ளது. முதலில் அவர் மீது ‘தேசத் துரோக’ வழக்கைப் பதிவு செய்து வெளிநாட் டிலிருந்து அவர் திரும்பும் வரை காத்திருந்து பெங்களூர் விமான நிலையத்தில் கருநாடக காவல்துறை கைது செய்து, சென்னை நகர காவல்துறையிடம் ஒப்படைத்தது. சைதை நீதிமன்றத்தில் நேர் நிறுத்தப்பட்டார் திருமுருகன் காந்தி. ஜெனிவாவில் உள்ள அய்.நா.வின் மனித உரிமைக் குழுவில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு பற்றி திருமுருகன் பேசியிருக்கிறார். இது தேச விரோதம் என்றது காவல்துறை. அய்.நா. மனித உரிமை ஆணையத்தில் பேசுவது எப்படி குற்றமாகும்? அதில் இந்தியாவும் இணைந் திருக்கிறதே? இந்தக் குற்றச்சாட்டில் எப்படி காவலில் வைப்பது என்று கேட்ட நீதிபதி, காவலில் அடைக்க மறுத்து, வேண்டுமா னால் அது குறித்து திருமுருகன் காந்தியிடம் 24 மணி நேர விசாரணை நடத்தி அவரை விடுவித்துவிட வேண்டும் என்றார் நீதிபதி.

அடுத்த சில மணி நேரங்களிலே இராயப்பேட்டை பெரியார் சிலைக்கு சட்ட விரோதமாக ஊர்வலம் சென்று மாலை அணிவித்ததாகக் கூறி வேறு ஒரு நீதிபதி முன் நிறுத்தி கைது ஆணை பெற்று வேலூர் சிறையில் அடைத்து விட்டனர்.

பெரியார் சிலைக்கு மாலை அணிவிப்பது குற்றமா என்று கேட்டு இராயப்பேட்டையில் உள்ள அதே பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்க வந்த தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் 9 பேரை காவல்துறை கைது செய்து சிறையிடைத்துள்ளது (ஆக.12இல்). பெரியார் சிலைக்கு மாலை போட் டதற்காக கைது செய்யவில்லை. 9 பேர் ஒன்றாகக் கூடி வந்ததுதான் குற்றம் என்கிறது காவல்துறை.

கலைஞர் மறைவுக்கு இறுதி மரியாதை தெரிவிக்க காங்கிரஸ் தலைவர் இராகுல் காந்தி வந்தபோது அவருக்குப் பாதுகாப்பு தர வேண்டிய காவல்துறை காணாமல் போய்விட்டது. கூட்ட நெரிசலில் சிக்கி திக்கு முக்காடிப் போய் தவித்தார் இராகுல் காந்தி. பலத்த பாதுகாப்புக்குரிய ஒரு அகில இந்திய கட்சியின் தலைவரை இப்படி ‘அம்போ’ என்று பாதுகாப்பு வழங்காமல் தவிக்க விட்ட காவல்துறை, அதற்குக் கூறிய காரணம் என்ன தெரியுமா? இராகுல் காந்தி வருவதாக அறிவித்த நேரத்துக்கு முன்கூட்டியே வந்து விட்டார். நாங்கள் என்ன செய்ய முடியும் என்று காரணம் கூறுகிறது. இராகுல் காந்தி காவல்துறையின் பாதுகாப்புப் பெற வேண்டுமானால் அவர் அறிவித்த நேரத்தில் சரியாக வந்து சரியாக அறிவித்த நேரத்தில் புறப்பட்டு விட வேண்டும் போலிருக்கிறது. அப்படிப் பாதுகாப்பில் ‘கறார்’ காட்டும் இதே காவல்துறை எஸ்.வி.சேகர் என்ற பார்ப்பன திரைப்பட நடிகர் மீது தொடரப் பட்ட வழக்கில் அவருக்கு உயர்நீதிமன்றம் முன் ஜாமின் மனுவை இரத்து செய்த பிறகும் மாதக் கணக்கில் அவரைக் கைது செய்யாத தோடு கைது செய்யப்பட வேண்டிய நபருக்கு பாதுகாப்பு அளித்து வந்தது. தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்திய நாதனின் (பார்ப்பனர்) நெருங்கிய உறவுக்காரர் என்பதற்காக காவல்துறை, இராகுல் காந்திக்கு தர மறுத்த ‘பாதுகாப்பை’ சட்டப்படி கைது செய்யப்பட வேண்டிய எஸ்.வி.சேகருக்கு ஓடோடி வழங்கியது.

காவல்துறையை இயக்குவது நடுவண் அரசால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரு பார்ப்பனர் குழுதான் என்பதற்கு இது ஒரு சான்று. மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிடம் அருகே கலைஞர் உடல் அடக்கத்துக்கு அனுமதி மறுத்து ‘அறிக்கை’ வெளியிட்டது. (அரசாணை அல்ல; அறிக்கை என்றுதான் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் கூறினார்) அரசின் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், அறிக்கைகளை அமைச்சர்கள் வெளியிட வேண்டுமே தவிர, அரசின் தலைமைச் செயலாளர் அல்ல; இதிலிருந்து தமிழக அமைச்சரவை அதிகாரம் பறிக்கப்பட்டு, பார்ப்பன தலைமைச் செயலாளருக்கு வழங்கப்பட்டிருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இதில் கலைஞருக்கு கடற்கரையில் இடம் தரக் கூடாது என்று வாதாடியவர் சி.எஸ். வைத்தியநாதன் எனும் பார்ப்பனர். அவர்தான் அரசு வழக்கறிஞர். இதே கருத்தை தொலைக்காட்சியில் பேசியவர் ‘துக்ளக்’ ஆசிரியரும் ஆர்.எஸ்.எஸ்.சின் அதிகார மய்யமுமான பார்ப்பனர் ஆடிட்டர் குருமூர்த்தி, தமிழக அரசின் அதிகாரப்பிடி ‘அவாள்’களிடம் தான் சிக்கியிருக் கிறது.

பெரியார் சிலைக்கு மாலையிட தடை; கலைஞர் உடலை அண்ணா நினைவிடம் அருகே அடக்கம் செய்யத் தடை - என்று தமிழின உணர்வுகளை அவமதிக்கும் செயல்பாடுகள், தமிழகத்தில் பா.ஜ.க.வை முழுமையாகத் துடைத்தழிக்கும் என்ற அளவில் நாம் வரவேற்கவே செய்கிறோம்.

பெரியார் சிலைக்குக் கூட்டமாக வந்து மாலை போடுவது குற்றம் என்று கைது செய்யும் காவல்துறை, அடுத்து கலைஞர் நினைவிடத்தில் கூட்டமாக வந்து மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துவதும் குற்றம் என்று அங்கே திரண்டு வரும் மக்களையெல்லாம் கைது செய்து தமிழகம் முழுதும் உள்ள நீதிமன்றங்களில் அவர்களைக் கொண்டு போய் நிறுத்தி ‘ரிமாண்ட்’ செய்தாலும் ஆச்சரியமில்லை. அதையும் செய்துவிட்டால் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியிலேயே பா.ஜ.க. என்ற மதவாத கட்சிக்கு ஒரு நிரந்தரப் புதை குழியும் நினைவுச் சின்னத்தையும் தமிழ்நாட்டு மக்கள் அமைப்பதற்கு பேருதவியாக இருக்கும். அப்போது எந்தத் தடையும் இல்லாமல் தமிழகமே திரண்டு வந்து அந்த ‘சமாதி’க்கு மலர்வளையம் வைக்கும் காலம் விரைந்து வந்து சேரும்.

# ரூ.2 இலட்சம் கொடுத்தால் யாரும் வாங்கலாம்: விலைக்கு விற்கப்படும் நீட் தேர்வர்களின் விவரங்கள்

நீட் தேர்வர்களின் பெயர், முகவரி, மெயில் ஐடி உள்ளிட்ட அனைத்து விவரங் களும் தனியார் பயிற்சி நிறுவனங்களுக்கு விலைக்கு விற்கப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

அதாவது, 2018ஆம் ஆண்டில் நீட் தேர்வு எழுதிய 13 லட்சம் மாணவர்களில், 2 லட்சம் மாணவர்களின் முழு விபரங்களும் தற்போது ஆன்லைனில் கிடைக்கின்றன; ரூ. 2 லட்சம் தந்தால், அந்த 2 லட்சம் மாணவர்களின் முழு விபரங்களையும் குறிப்பிட்ட இணையத்தின் வாயிலாக பெற்றுக் கொள்ளலாம்.

தனியார் பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள், பயிற்சி மையங்கள் ஆகிய வற்றை குறிவைத்து, இந்த டேட்டாக்கள் விற்கப்பட்டுள்ளன.

நீட் தேர்வில் வெற்றி பெற்றும், குறைந்த மதிப்பெண் எடுத்ததால், சீட் கிடைக்காமல் போனவர்களை கண்டுபிடித்து, அவர்களை தங்கள் கல்லூரிகளில் சேருமாறு அழைக்க வும், இத்தனை லட்சம் கொடுத்தால் நீங்கள் மருத்துவப் படிப்பில் சேரலாம் என்று பேரம் பேசவும், தனியார் கல்லூரிகளுக்கு மாணவர் களின் தரவுகள் பயன்பட்டிருக்கின்றன.

அதேபோல நீட் தேர்வில் வெற்றி பெறாதவர்களை தொடர்புகொண்டு, அடுத்தாண்டு நீட் தேர்வில் வெற்றிபெற நாங்கள் பயிற்சி அளிக்கிறோம்; இவ்வளவு பணம் கட்டினால் போதும், நீங்கள் டாக்டர் ஆவது உறுதி என்று ஆள் பிடிப்பதற்கு, தனியார் பயிற்சி நிறுவனங்களும் இந்த தகவல்களை விலைக்கு வாங்கியிருக்கின்றன.

தகவல்களை விற்றதன் மூலம் குறிப்பிட்ட இணைய நிறுவனமும் கொள்ளை லாபம் அடைந்திருக்கிறது. தனியார் ஊடக நிறுவன மொன்றுதான் இந்த உண்மைகளை தற்போது வெளிக்கொண்டு வந்துள்ளது.

குறிப்பிட்ட அந்த இணையதள நிறுவனத் திடம், நீட் தேர்வர்களின் விவரங்களை விலைக்கு கேட்பதுபோல கேட்டு, தனியார் ஊடகம் நிறுவனம் ஊடாடியுள்ளது. அதற்கு அந்த இணையதளம், நீட் தேர்வர்கள் தொடர்பான ‘சாம்பிள் டேட்டா’வை வாட்ஸ் ஆப்பில் ஷேர் செய்துள்ளது.

அதை வைத்து, தனியார் ஊடகம், சாம்பிள் டேட்டாவில் குறிப்பிடப்பட்டிருந்த போன் நம்பர்களைத் தொடர்புகொண்டு பேசுகை யில், போனை எடுத்தவர்கள், தாங்கள் நீட் தேர்வு எழுதியவர்கள்தான் என்றும், அவர்களைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் உண்மைதான் என்றும் கூறியுள்ளனர்.

நீட் பயிற்சிக்கு வருமாறு, தனியார் பயிற்சி நிறுவனங்கள் பல தங்களைத் தொடர்பு கொண்டதையும் தெரிவித்துள்ளனர்.

‘நான் நீட்டில் வெற்றி பெற்று விட்டேன்; இந்நிலையில், கடந்த ஒரு மாதமாக இதில் கல்லூரியில் சேர்ந்து கொள், அந்த படிப்பில் சேர்ந்து கொள் என்று நாளொன்றுக்கு சுமார் ஐந்து போன்களாவது வருகின்றது’ என்று மாணவர் ஒருவர் கூறியுள்ளார்.

ஐடி ஆக்ட் 43A மற்றும் 72A ஆகிய சட்டங்கள், இதுபோன்ற தகவல்கள் கசிவை தடை செய்கின்றன. எனினும் இந்த சட்டங் களால் இதுவரை யாரும் தண்டிக்கப் பட்டதாக இல்லை என்பது முக்கியமானது. மாணவி ஒருவர் எழுதிய கடிதத்தை, பிரதமர் நரேந்திர மோடி, தனது ட்விட்டர் பக்கத்தில் அண்மையில் பகிர்ந்துள்ளார். ஆனால், அந்த மாணவியின் மின்னஞ்சல் மற்றும் தொலை பேசி எண்ணை அவர் மறைக்கவில்லை. ஐடி ஆக்ட் 43A மற்றும் 72A அடிப்படையில் இதுவும் குற்றம் எனப்படுகிறது.

எனவே, சட்டங்கள் இவ்வாறெல்லாம் இருக்கும்போது, ‘நீட்’ தேர்வர்களின் தகவல் களை கசியவிட்டவர்கள் யார்; அவர்களை அரசு கண்டுபிடிக்குமா; தண்டிக்குமா? என்ற கேள்விகள் எழுகின்றன.

ஏற்கெனவே, அதிகமான பாதுகாப்பு வசதிகள் கொண்டிருப்பதாக கூறப்பட்ட ஆதார் தகவல்களும் விலைக்கு விற்கப்பட்டன. ஒருவரின் ஆதார் ரகசியங்களை யார் வேண்டு மானாலும் தெரிந்து கொள்ள முடியும் என்ற நிலையில்தான் பாதுகாப்பு இருக்கிறதா? என்று இப்போதுவரை கேள்விகள் இருந்து வருகின்றன. இந்நிலையில், நீட் தேர்வர்களின் விவரங்களும் இணையத்தில் கிடைக்கும் என்பது, ஆட்சியாளர்களின் அலட்சி யத்தையே காட்டுவதாக அமைந்துள்ளது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கலைஞருக்கு கழக சார்பில் சென்னையில் வீரவணக்கப் பேரணிகள்!

*கலைஞர் மறைவுக்கு கழக சார்பில் சென்னையில் வீர வணக்கப்பேரணி நடத்தப்பட்டது. பல்வேறு ஊர்களில் வீர வணக்க நாள் கூட்டங்கள் நடத்தப்பட்டன.*

**சென்னை :** திராவிட அரசியலின் பெருமைக்குரிய அடையாளம் டாக்டர் கலைஞருக்கு 08.08.2018





காலை 11 மணிக்கு அண்ணாசிலையி லிருந்து இராயப்பேட்டை பகுதியில் அமைந்துள்ள பெரியார் சிலையை நோக்கி தோழர்கள் வீரவணக்க முழக்கத்தோடு நடந்து வந்து இறுதி வீரவணக்கத்தை செலுத்தினார்கள்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகரன் ஆகியோர் டாக்டர் கலைஞரின் உருவப்படத்திற்கு இறுதி மரியாதை செலுத்தி வீர வணக்க உரையாற்றினர். தென் சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி நிகழ்வை ஒருங்கிணைத்தார். இறுதியாக ஒரு நிமிட மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**நாமக்கல் :** கலைஞருக்கு, திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நாமக்கல் மாவட்டம் திருச்செங் கோட்டில் ஞாயிறு (12.8.2018) காலை 10 மணியளவில் திருச்செங்கோடு நகரத் தலைவர் சோமசுந்தரம் தலைமை வகிக்க, மாவட்ட அமைப்பாளர் வைரவேல் முன்னிலையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

நிகழ்வில், மாவட்ட தலைவர் சாமி நாதன், மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட பொருளாளர் முத்துப்பாண்டி ஆகியோர் கலை ஞரின் சாதனைகள் மற்றும் கலைஞரின் மக்கள் நலத் திட்டங் களைப் பற்றி நினைவு கூர்ந்து உரை யாற்றினர். மேலும், திருச்செங்கோடு, பள்ளிபாளையம் பகுதிகளைச் சேர்ந்த கழகத் தோழர்கள் கலந்து கொண் டனர்.

ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் மாநில துணைப்பொதுச் செயலாளர் தமிழரசு இரங்கல் உரை நிகழ்த்த, ஆதித்தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் செல்வ வில்லாளன் கலைஞரின் சமூக நீதி சாதனைகள் மற்றும் ஒடுக்கப் பட்டவர்களின் குரலாக எவ்வாறு செயல்பட்டார் என்பதையும் நிறைவுரையாக தனது இரங்கல் கருத்தைப் பதிவு செய்தார்.

நாமக்கல் மேற்கு மாவட்ட ஆதித் தமிழர் பேரவையின் செயலாளர் சரவணன் மற்றும் திருச்செங்கோடு பகுதியின் ஆதித்தமிழர் பேரவையைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண் டனர். இறுதியாக கௌதமன் நன்றியுரையாற்றினார்.

**திருப்பூர் :** திருப்பூர் திமுகழகம் சார்பாக கலைஞருக்கு 10.08.2018 அன்று மாலை 3 மணிக்கு மவுன அஞ்சலி நடைபெற்றது. இதில் அனைத்து கட்சிகளும் கலந்து கொண்டன.



திராவிடர் விடுதலைக்கழகம் சார்பாக திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் இராசு, மாவட்டச் செயலாளர் நீதிராசன், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, வடக்கு மாவட்டச் செயலாளர் கருணாநிதி, மாநகரத் தலைவர் வீ. தனபால், மாநகர அமைப்பாளர் முத்துக்குமார், சின்னு,



நகுலன், சரத், பார்வதி மற்றும் பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை ஆகியோர் கலந்து கொண்டு கலைஞருக்கு மலர்தூவி மலர் அஞ்சலி செலுத்தினர்.

**நங்கவள்ளி :** 08.08.2018 அன்று காலை மறைந்த கலைஞருக்கு திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கிருஷ்ணன், ராஜேந்திரன், கண்ணன், நங்கவள்ளி ஒன்றியத் தோழர்கள் மற்றும் திமுக நகர செயலாளர் வெங்கடாசலம் ஆகியோர் நங்கவள்ளி பேருந்து நிலையம் தொடங்கி ஊர்வலமாக சென்று இறுதி வீரவணக்க அஞ்சலியை கலைஞரின் சமூகநீதி பணிகளை விளக்கும் முழக்கங்களோடு நடத்தினர்.

**விழுப்புரம் :** 8.8.2018 அன்று விழுப்புரம் மாவட்டக் கழகம் சார்பில் கலைஞருக்கு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.



காலை 10 மணியளவில் கடுவனூர் பெரியார் படிப்பகத்திலிருந்து பேரணியாகச் சென்று பேருந்து நிறுத்தம் அருகில் நிறைவடைந்தது. அங்கு கலைஞர் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தினர். மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் க. இராமர், மு.நாகராஜ், மா.குமார் உள்பட கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் 250 பேர் பங்கேற்றனர்.

மாலை 4 மணியளவில் பாக்கம் கிராமத்திலும் கழகத்தின் சார்பில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர்கள் துளசி, நீதிபதி, பிரபு ஆகியோர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கழகத் தோழர்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கற்பித்துள்ளனர். ஏழு பேரும் நிரபராதிகளா? குற்றவாளிகளா? என்கிற சட்ட நுணுக்கங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, 27 ஆண்டுகள் நன்னடத்தையுடன் சிறையில் இருந்தார்கள் என்கிற ஒரே அடிப்படையில் இவர்களை விடுதலை செய்து, இவர்களின் எஞ்சிய வாழ்நாளைத் தம் குடும்பத்தினருடன் கழிக்குமாறு செய்வதே இயற்கை சார்ந்த நீதியாகும்.

இப்போது எழுவரின் விடுதலைக்காக இரண்டு வழிகள் உள்ளன. உச்சநீதி மன்றத்தில் உள்ள குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 432 குறித்த வழக்கில், நடுவண் அரசு ஏழுவரையும் விடுதலை செய்யக்கூடாது என்று கருத்துரைத்தாலும், 27 ஆண்டுகள் நன்னடத்தையுடன் இவர்கள் சிறையில் இருந்ததைக் கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் இவர்களை விடுதலை செய்வதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கலாம். இந்த அதிகாரம் உச்சநீதிமன்றத்துக்கு இருக்கிறது. இத்தகைய தீர்ப்பைப் பெறுவதற்கு தமிழ்நாட்டு அரசு இந்தியாவின் தலைசிறந்த வழக்குரைஞர்களைக் கொண்டு இவ்வழக்கில் வாதிட வேண்டும்.

மற்றொரு வழி, தமிழ்நாட்டு அரசின் அமைச்சரவையின் முடிவினை ஏற்று அரசமைப்புச் சட்டப் பிரிவு 161இன்படி, தமிழக ஆளுநர் ஏழு பேரையும், விடுதலை செய்யலாம். உச்சநீதிமன்றத்தில் நடுவண் அரசு குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 432 குறித்து தொடர்ந்துள்ள வழக்கு, இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். எனவே அரசமைப்புச் சட்ட பிரிவு 161இன்கீழ் விடுதலை செய்வதற்கு ஆளுநருக்குக் கட்டற்ற அதிகாரம் உண்டு.

தேசத்தந்தை காந்தியின் கொலை வழக்கில் வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்ட கோபால் கோட்சேவும் மற்றவர்களும் 14 ஆண்டுகள் சிறையில் இருந்த பின் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று 1961இல் உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பித்தனர். உச்சநீதிமன்றம் இக்கோரிக்கையை ஏற்க மறுத்தது. ஆயினும் மகாராட்டிர மாநில அரசு தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு 13.10.1964 அன்று காந்தி யார் கொலை வழக்கில் வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்தது.

எனவே தமிழக அரசுக்கும் அரசியலமைப்புச் சட்டம் 161ஆவது பிரிவின்கீழ் இந்த அதிகாரம் உள்ளது. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி து. அரிபரந்தாமன் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார். ஆனால் காந்தியைக் கொலை செய்த குற்றவாளிகள் வாழ்நாள் தண்டனையிலிருந்து 16 ஆண்டுகள் சிறையில் இருந்தபின் விடுவிக்கப்பட்டனர் என்கிற உண்மையை மறந்துவிட்டு, நடுவண் அரசு குடியரசுத் தலைவரின் நிராகரிப்புக் குறித்துத் தமிழக அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் ஏழு பேரை விடுதலை செய்வது மோசமான முன்னுதாரணமாகிவிடும் என்று பூச்சாண்டி காட்டியிருக்கிறது.

எனவே தமிழக அரசு மீண்டும் ஏழு பேரின் விடுதலை குறித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். ஏழு பேரை விடுதலை செய்வது என்கிற அமைச்சரவையின் முடிவை ஆளுநருக்கு அனுப்பி, அரசமைப்புச் சட்டத்தின் 161ஆவது பிரிவின் கீழ் விடுதலை செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை நிறைவேற்றும் வகையில் ஏழரைக் கோடித் தமிழர்களும் உரத்துக் குரல் கொடுக்க வேண்டும்.

**– செங்கதிர், 'சிந்தனையாளன்'**

**நிமிர்வோம்**
தடைகளைத் தகர்த்து...

அஞ்சல் வழியாக 'நிமிர்வோம்' இதழ் பெற வேண்டியவர்கள் ஆண்டுக் கட்டணம் ரூ.300 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**பணவிடை அனுப்ப வேண்டிய முகவரி :**

'நிமிர்வோம்'
29, பத்திரிகையாளர் குடியிருப்பு
திருவான்மியூர், சென்னை - 600 041.

**வங்கி வழியாக அனுப்ப:**

'புரட்சிப் பெரியார் முழக்கம்'
கரூர் வைஸ்யா வங்கி
அடையாறு கிளை
நடப்புக் கணக்கு (Current A/c)
வங்கிக் கணக்கு எண் : 1257115000002041
I.F.C. CODE : KVBL0001257

**தொடர்புக்கு:** 7299230363

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th August 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN